# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண்.15
# 2025, மார்ச் 26, புதன்கிழமை
# பங்குனி 12, திருவள்ளுவர் ஆண்டு – 2056

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 09.30 மணிக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:–

"அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை."

(போர்க்களத்தில் எதிர்ப்புகளைத் தாங்கிப் படை நடத்தும் பொறுப்பு அதற்கான ஆற்றல் படைத்தவர்களிடம் இருப்பது போலத்தான் குடிமக்களைக் காப்பாற்றி உயர்வடையச் செய்யும் பொறுப்பும் அவர்களைச் சேர்ந்த ஆற்றலாளர்களுக்கே உண்டு.)

1. இரங்கற் குறிப்பு

சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்கள் மறைவு குறித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.

2. வினாக்கள் – விடைகள்

வரிசை எண்கள் 100 முதல் 110 வரையுள்ள உடுக்குறியிட்ட வினாக்கள் பேரவையில் வினவப்பட்டு விடையளிக்கப்பட்டன.

3. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு

"தஞ்சாவூர் மாவட்டம், வீரமாங்குடி ஊராட்சியில் கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம் அமைக்கப்படவுள்ளது குறித்து." முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்தார்கள்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமளித்தார்கள்.

4. தகவல் கோரல்

"திருகோவில்களில் கூட்ட நெரிசலில் ஏற்பட்ட நிகழ்வுகள் குறித்து" திருமதி வானதி சீனிவாசன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி மற்றும் திரு. ச. சிவகுமார் ஆகியோர் தகவல் கோரினார்கள்.

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமளித்தார்கள்.

5. 2025–2026–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்

2025–2026–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

**கோரிக்கை எண்.42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கை எண்.42–ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.24,666,92,19,000/–, மூலதனக் கணக்கில் ரூ.4,796,57,79,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,00,000/–ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்கள்.

கீழ்க்காணும் உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தனர்:–

1. திரு. இராம. கருமாணிக்கம்
2. திரு. R. ராதாகிருஷ்ணன்
3. திரு. க. அசோகன்
4. திரு. JMH. அசன் மௌலானா
5. திரு. தி. ராமச்சந்திரன்
6. திரு. எஸ். சதாசிவம்
7. திரு. இரா. அருள்
8. திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்
9. திரு. ஜி.கே. மணி
10. திரு. ச. சிவகுமார்
11. திரு. ஈ. பாலசுப்ரமணியன்
12. திரு. எம்.ஆர். காந்தி
13. டாக்டர் (திருமதி) சி. சரஸ்வதி
14. திரு. ட்டி. இராமச்சந்திரன்
15 திரு. S.S. பாலாஜி
16. திரு. ஓ.எஸ். மணியன்
17. திரு. ஆர்.பி. உதயகுமார்
18. திரு. கி. அசோக்குமார்
19. திரு. இரா. காமராஜ்
20. திரு. இ.மா. மான்ராஜ்
21. திரு. ஆ. அருண்மொழிதேவன்
22. திரு. வே. சம்பத்குமார்
23. திரு. அம்மன் K. அர்ச்சுணன்
24. திரு. கே.ஆர். ஜெயராம்
25. திரு. ஆ.மு. முனிரத்தினம்
26. திரு. செ. கிருஷ்ணமுரளி
27. திரு. S. பழனி நாடார்
28. திரு. M. ராஜமுத்து
29. திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்
30. திரு. அ. பண்ணாரி
31. திரு. T.M. தமிழ்செல்வம்
32. திரு. V.P. கந்தசாமி
33. திரு. ந. தளவாய் சுந்தரம்
34. திருமதி கு. மரகதம் குமரவேல்
35. திரு. சேவூர் S. இராமச்சந்திரன்
36. திரு. பி. அய்யப்பன்
37. திரு. S. ஜெயக்குமார்
38. திரு. கோ. செந்தில் குமார்
39. திரு. செ. ராஜேஷ் குமார்
40. திரு. ஜே.ஜி. பிரின்ஸ்
41. திரு. K.A. பாண்டியன்
42. திரு. பெ. பெரியபுள்ளான் (எ) செல்வம்
43. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி
44. திரு. ஆர். வைத்திலிங்கம்
45. திரு. P.R.G. அருண்குமார்
46. திரு. வி.பி. நாகைமாலி
47. திரு. மா. சின்னதுரை
48. திரு. K. மாரிமுத்து
49. திரு. செல்லூர் கே. ராஜூ
50. திரு. துரை சந்திரசேகர்
51. திரு. பெரி. செந்தில்நாதன்
52. திரு. K.N. விஜயகுமார்
53. திரு. A.P. ஜெயசங்கரன்
54. திரு. மா. செந்தில்குமார்
55. திரு. சு. ரவி
56. திரு. பொன். ஜெயசீலன்
57. திரு. A.K. செல்வராஜ்
58. திரு. நத்தம் இரா. விசுவநாதன்
59. திருமதி எஸ். தேன்மொழி
60. திரு. கே.பி. அன்பழகன்
61. திரு. சா. மாங்குடி
62. டாக்டர் சி. விஜயபாஸ்கர்

மேற்காணும் மானியக் கோரிக்கை மற்றும் வெட்டுத் தீர்மானங்கள் மீதான விவாதத்தில் கீழ்க்காணும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்:–

1. **திரு. கடம்பூர் ராஜூ**
2. **திரு. க. கார்த்திகேயன்**
3. **திரு. A. நல்லதம்பி**
4. **திரு. ஆர். கணேஷ்**
5. **திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்**
6 **திரு. எம்.சி. சண்முகையா**
7. **திரு. S.S. பாலாஜி**
8. **திரு. மா. சின்னதுரை**
9. **திரு. K. மாரிமுத்து**
10. **திரு. பெ. ராமலிங்கம்**
11. **திரு. A.K. செல்வராஜ்**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கினார்கள்.

மானியக் கோரிக்கை எண்.42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மீது உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்கீழ் கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

பேரவை பிற்பகல் 2.33 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பேரவை மீண்டும் 2025–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 27–ஆம் நாள் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்குக் கூடும்.

**முனைவர் கி. சீனிவாசன்,**
**முதன்மைச் செயலாளர்.**